2011 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 20 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 20 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்களின் ஒட்டுமொத்த அன்பையும், பேராதரவையும் பெற்று, சூழ்ச்சிகள் பல வென்று, வறியவர்களை வாழ்விக்கவும், வாடிக் கிடக்கும் மக்களை தேடிச் சென்று உதவிடவும், தமிழகத்தை இந்திய அளவில் மட்டுமல்லாமல், உலக அளவிலும் முன்னிலைப்படுத்திட, பொதுத் தேர்தலில் வரலாற்றுச் சிறப்புமிக்க பெருவெற்றியைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, அரசு இயந்திரங்களுக்கு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொன்ன மசியிட்டு, தலைசிறந்த அரசு நிருவாகத்தை தமிழக மக்களுக்காய் தந்து, பார்போற்றும் நல்லாட்சி நடத்திவரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும்,

பண்பின் திருவுருவமான மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், தமிழகத்தின் நலம் கூட்டவும், வளம் பெருக்கவும், அம்மாவின் அறிவுரையின்படி செம்மையுற சேவையாற்றி வரும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும்,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது இதயம் கனிந்த வணக்கங்கள்.

2011 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடர் நிறைவுபெறும் இந்நன்னாளில் இக்கூட்டத் தொடரில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்து அவைக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று!
என்று சொன்னாள் அவ்வைப் பிராட்டி.

பிற்பகல் 4-55

நல்லவர்களைக் கண்குளிரக் காண்பதுவும் நன்மை தரும், நல்லவர்களின் உரைகளைச் செவிமகிழக் கேட்பதுவும் நன்மை தரும். நல்லவர்களின் இனிய குணங்களை வாயாரப் புகழ்வதும் நன்மை தரும். இத்தகைய குணங்களைக் கொண்டவர்களோடு சேர்ந்திருப்பதுவும் நன்மையே தரும் என்பதுதான் அவ்வை சொன்ன அந்த மூதுரையின் அழகிய அர்த்தம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இலக்கணத்திற்கு ஏற்றாற்போல், தமிழகத்தின் பதினான்காவது சட்டமன்றப் பேரவை, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் தலைமையில் நல்லவர்களைக் கொண்டிருக்கிறது. நல்லவர்களின் உரைகளும் இங்கே ஒலித்தன. (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாள் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அமைந்த பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 23-5-2011 முதல் 10-6-2011 வரை நடைபெற்றது. இக்கூட்டத் தொடரின் இரண்டாவது கூட்டம் 4-8-2011 முதல் இன்று (14-9-2011) வரையிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இக்கூட்டத் தொடரின்போது பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.